**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**
*******

**ஊடக அறிக்கை**

**இலங்கை சுகாதார அமைச்சரும் இந்திய உயர் ஸ்தானிகரும் மெடிகெயர் 2019 கண்காட்சியை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைத்தனர்**

*''இணைந்தியங்குதல் உற்சாகம் தரும்;பங்குடமை முன்னேற்றம் தரும் என உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார் ''*

மெடிகெயர் கண்காட்சியின் 10ஆவது நிகழ்வான, இலங்கையின் தேசிய சுகாதாரப் பராமரிப்புக் கண்காட்சி இன்று சுகாதார, போசாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சர் கௌரவ Dr.ராஜித சேனாரட்ன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. சுகாதார பிரதி அமைச்சர் கௌரவ. பைசால் காசிம், இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தானத்தின் பிரதிநிதி Dr.ரஸியா பென்ஸி, இலங்கை சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், மற்றும் பல்வேறு சுகாதாரத் துறை சார்ந்த தொழில்சார் தகைமையாளர்களும் இதன் போது பிரசன்னமாக இருந்தனர்.

2. சுகாதார, போசாக்கும் மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சர் Dr.ராஜித சேனாரட்ன சுகாதாரத்துறையில் இலங்கை அண்மையில் அடைந்த சாதனைகள் பற்றி நீண்டதொரு உரை ஆற்றினார்.

3. இந்திய உயர்ஸ்தானிகர் தனது உரையில், *'நோய்களுக்கு எல்லைகள் தெரியாது, சுகாதாரத்துறையில் எங்களது ஒத்துழைப்பும் எல்லைகள் கடந்து செல்லும் தேவையிலுள்ளது* என்பதைக் குறிப்பிட்டு, சுகாதாரத்துறையில் ஒத்துழைப்புக்கான தேவையைக் கோடிட்டுக் காட்டினார். இணைந்தியங்குதல் உற்சாகம் தரும் மற்றும் பங்குடமை முன்னேற்றம் தரும் என அவர் வலியுறுத்தினார். உலகின் மிகவும் அபிவிருத்தியடைந்த சில நாடுகளுக்கு ஒப்பிடும் வகையில் முன்னேற்றகரமான சுகாதாரக் குறிக்காட்டிகள் உட்பட சுகாதாரத்துறையில் இலங்கை அசாதாரண அடைவு மட்டங்களை அடைந்தமைக்கு இலங்கையை அவர் பாராட்டினார். இந்திய சுகாதாரத்துறையில் இடம்பெறுகின்ற நிலைமாற்றங்களைக் குறிப்பிட்ட உயர் ஸ்தானிகர் இத்தொழில்துறையில் இரண்டு நாடுகளுக்கும் புத்தாக்கம் மற்றும் ஒன்றாக வளர்வதற்கு இவை பெரும் வாய்ப்புகளை அளிக்கின்றன எனவும் குறிப்பிட்டார்.

4. சுகாதார, போசாக்கும் மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சர் கௌரவ Dr.ராஜித சேனாரட்ன மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் மார்ச் 2018 இல் மெடிகெயரின் கடந்த கண்காட்சியையும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைத்திருந்தனர்.

5. மெடிகெயர் கண்காட்சி இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்துடனான (FICCI) பங்குடமையுடன் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இக் கண்காட்சியில் 40 இற்கும் அதிகமான கம்பனிகளை உள்ளடக்கிய இந்திய காட்சிகூடமும் உயர் ஸ்தானிரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மெடிகெயர் கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் மார்ச் 1ஆம் திகதியிலிருந்து 3ஆம் திகதி வரை நடைபெறும்.

* * * * *